(2025-26-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்) (பக்கங்களின் எண்ணிக்கை : 2)

SUBJECT CODE | 25 PTM 1E1

REG.NO:

# என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

## பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் - 2025

எம். ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 75

முதல் பருவம் நேரம் : 3 மணி

## கொங்கு நாட்டியல்

பகுதி – அ (10x1=10 மதிப்பெண்கள்)

பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **(K2)**

1. கொங்கு நாட்டின் வடக்கு எல்லையாகக் கருதப்படுவது எது?

அ) தலைமலை (எ)பெரும்பாலை ஆ) வெள்ளிமலை
இ) குளித்தலை ஈ) வைகாவூர்

2. கோவை கிழாரின் இயற்பெயர் யாது?

அ) மருதாச்சலம் செட்டியார் ஆ) ராமச்சந்திர செட்டியார்
இ) சி. கே.சுப்பிரமணிய முதலியார் ஈ) கந்தசாமி முதலியார்

3. அவ்வையாரை வரவேற்றுப் பொன் இலையில் உணவளித்து பாராட்டியவர் யார் ?

அ) ஐவேலி அசதி ஆ) பூங்கோதை இ) அழகு நாச்சி ஈ) துளசி அம்மாள்

4. கொடுமுடி அக்காலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டது?

அ) கொங்கு சோழக் கொடுமுடி ஆ) திருப்பாண்டிக் கொடுமுடி
இ) பூலாங்குறிச்சி ஈ) பொற்பனைக்கோட்டை

5. கொங்கு நாட்டில் ஓடாநிலைக்கோட்டை கட்டி ஆண்டவர் யார்?

அ) திருப்பூர் குமரன் ஆ) வ. உ. சி. இ) சுப்பிரமணிய சிவா ஈ) தீரன் சின்னமலை

கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக. **(K2)**

6. கொங்கு பெயர் காரணம் கூறுக.
7. கொங்கு நாட்டை ஆண்ட அரசர்கள் யாவர் ?
8. கழுத்தில் அணிந்திருந்த தாலியைக் கழற்றி புலவர் கையில் கொடுத்த பெண் யார்?
9. கொங்குச் சோழர்கள் குறித்து பட்டியலிடுக.
10. சுதந்திரப் போராட்டத்தில் கொங்கு மண்டலத்தில் இரட்டைக் குழல் துப்பாக்கிகளாக செயல்பட்டவர்கள் யார்?

பகுதி – ஆ ( 5 X 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. **(K3)**

11. அ) கொங்கு நாடு சேர நாட்டுடன் கலந்திருப்பதைச் சான்றுடன் நிறுவுக.

(அல்லது)

ஆ) பழங்கொங்கு நாட்டு சிறப்பினை விவரிக்க.

(த.பி.பா.)

12. அ) கொங்கு நாட்டுப் புலவர்கள் குறித்து குறிப்பு வரைக.

(அல்லது)

ஆ) கொங்கு நாட்டுச் சித்தர்கள் சைவ நாயன்மார்கள் பற்றி விவரிக்க.

13. அ) வெற்றி மங்கை வெள்ளையம்மாள் கற்புத்திறன் குறித்து ஆராய்க .

(அல்லது)

ஆ) அதிசயப் பெண் அருக்காணித் தங்கம் - குறிப்பு வரைக .

14. அ) கொங்கு நாட்டில் கங்க மன்னர்களின் ஆட்சி குறித்து விளக்கி எழுதுக .

(அல்லது)

ஆ) கொங்கு நாட்டுச் சடங்கு முறையினை ஆராய்க .

15. அ) அவிநாசி லிங்க செட்டியாரின் விடுதலை வேட்கையினை விவரி.

(அல்லது)

ஆ) கொங்கு நாட்டில் பகுதியில் மீது சேகரித்த வழக்காறுகள், கோயில்கள் குறித்த தரவுகளைச் சான்றுடன் விவரிக்க .

பகுதி – இ ( **5 X 8 = 40** மதிப்பெண்கள் )

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.

**(K4 (Or) K5)**

16. அ) கொங்கு நாட்டின் எல்லைகள் பற்றிக் கட்டுரை வரைக .

(அல்லது)

ஆ) பழங்கொங்கு நாட்டின் தனி ஆட்சி, மக்கள், இயற்கை வளம் குறித்து தொகுத்து எழுதுக.

17. அ) கொங்கு நாட்டின் பாடல் பெற்ற தலங்கள் குறித்து ஆராய்க. .

(அல்லது)

ஆ) கொங்கு நாட்டின் நிகழ்கால பெருமைகளாக சுட்டப்படுவன பற்றி எடுத்துரைக்க .

18 . அ) திருவயிறு வாய்த்த மாதேவி தாமரை நாச்சியார் பண்புநலன் குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

ஆ) மாண்புடைய மனைக்கிழத்தியர் குறித்து விவரிக்க.

19. அ) பாண்டியர் ஆட்சியில் கொங்குநாடு குறித்து கட்டுரை வரைக..

(அல்லது)

ஆ) கொங்கு நாட்டுப் பண்பாடு, கோட்பாடுகள், நாகரீகம் பழக்கவழக்கங்களை எடுத்துரைக்கவும்

20. அ) விடுதலைப் போராட்ட வரலாற்றில் கொங்கு நாட்டின் பங்கினை கட்டுரை வரைக.

(அல்லது)

ஆ) தீரன் சின்னமலை திருப்பூர் குமரனின் விடுதலை உணர்வு குறித்து தொகுத்து எழுதுக .



********